# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

******

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
**முறையீட்டு மனு எண். 145/2018**
**ஆணை எண். நாள். 10–09–2018**

*******

**திரு.P.H.உதயகுமார்,**
**74, காமராஜ் நெடுஞ்சாலை,**
**பழைய பெருங்களத்தூர்,**
**சென்னை–600 063.** — — முறையீட்டு மனுதாரர்.

**செயல் அலுவலர்,**
**பெருங்களத்தூர் பேரூராட்சி,**
**20, காமராஜ் நெடுஞ்சாலை,**
**பெருங்களத்தூர்,**
**சென்னை–600 063.** — — எதிர் மனுதாரர்.

ஆணை.

காஞ்சிபுரம் மாவட்டம், பழைய பெருங்களத்தூர், எண்.74, காமராஜ் நெடுஞ்சாலை என்ற முகவரியினைச் சேர்ந்த, திரு. P.H. உதயகுமார், என்பவரின் 20.06.2018ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.06.2018 அன்று பெறப்பட்டது. முறையீட்டு மனுவினை பரிசீலித்து கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், காஞ்சிபுரம் மாவட்டம், பெருங்களத்தூர் பேரூராட்சி நிர்வாகம் குறித்தான சில புகார்களை தெரிவித்து விசாரணைக் கோரி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 28.06.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில், முறையீட்டு மனுவினை 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளில், விதி–4ன்படி உரிய படிவத்தில் (படிவம்.1) தனது முறையீட்டு மனுவினை பூர்த்தி செய்தும், விதி–6ன் கீழ் கட்டணமாக ரூ.10/–க்கான

நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் முறையீட்டு மனுவிற்கான ஆதார ஆவண நகல்களுடன் முறையீட்டு மனுவினை சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது. மேற்படி படிவத்தின் மாதிரி ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் இதுவரை முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை உரிய விதி முறைகளின்படி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

எனவே உரிய விதிகளின்படி முறையீட்டு மனுவினை சமர்ப்பிக்கும் நேர்வில், இம்முறைமன்ற நடுவத்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

-//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//-

17/9/2018

செயலாளர்.

பெறுநர்

1.திரு.P.H.உதயகுமார்,
74, காமராஜ் நெடுஞ்சாலை,
பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063.

2. செயல் அலுவலர்,
பெருங்களத்தூர் பேரூராட்சி,
20, காமராஜ் நெடுஞ்சாலை,
பெருங்களத்தூர்,
சென்னை - 600 063.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர்அலுவலகம்,
காஞ்சிபுரம்.